# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# மூன்றாம் பத்து

## ஏழாம் திருவாய்மொழி - பயிலும்
## அடியார்களிடத்தில் ஆளானார்க்குத் தாம் ஆட்பட்டிருத்தலை அருளிச் செய்தல்

** பயிலும் சுடர் ஒளி மூர்த்தியைப் * பங்கயக் கண்ணனை *
பயில இனிய * நம் பாற்கடல் சேர்ந்த பரமனை **
பயிலும் திரு உடையார் * யவரேலும் அவர் கண்டீர் *
பயிலும் பிறப்பிடை தோறு * எம்மை ஆளும் பரமரே 1

ஆளும் பரமனைக் கண்ணனை * ஆழிப் பிரான் தன்னை *
தோளும் ஓர் நான்குடைத் * தூ மணி வண்ணன் எம்மான் தன்னை **
தாளும் தடக் கையும் கூப்பிப் * பணியும் அவர் கண்டீர் *
நாளும் பிறப்பிடை தோறு * எம்மை ஆளுடை நாதரே 2

நாதனை ஞாலமும் வானமும் ஏத்தும் * நறுந்துழாய்ப்
போதனை * பொன் நெடுஞ்சக்கரத்து * எந்தை பிரான் தன்னை **
பாதம் பணிய வல்லாரைப் * பணியும் அவர் கண்டீர் *
ஓதும் பிறப்பிடை தோறு * எம்மை ஆள் உடையார்களே 3

உடை ஆர்ந்த ஆடையன் * கண்டிகையன் உடை நாணினன் *
புடை ஆர் பொன் நூலினன் * பொன் முடியன் மற்றும் பல் கலன் **
நடையா உடைத் திரு நாரணன் * தொண்டர் தொண்டர் கண்டீர் *
இடை ஆர் பிறப்பிடை தோறு * எமக்கு எம் பெருமக்களே 4

பெருமக்கள் உள்ளவர் தம் பெருமானை * அமரர்கட்கு
அருமை ஒழிய * அன்று ஆரமுது ஊட்டிய அப்பனை **
பெருமை பிதற்ற வல்லாரைப் * பிதற்றுமவர் கண்டீர் *
வருமையும் இம்மையும் * நம்மை அளிக்கும் பிராக்களே 5

அளிக்கும் பரமனைக் கண்ணனை * ஆழிப் பிரான் தன்னை *
துளிக்கும் நறுங்கண்ணித் * தூ மணி வண்ணன் எம்மான் தன்னை **
ஒளிக் கொண்ட சோதியை * உள்ளத்துக் கொள்ளுமவர் கண்டீர் *
சலிப்பின்றி ஆண்டு எம்மைச் * சன்ம சன்மாந்தரம் காப்பரே 6

சன்ம சன்மாந்தரம் காத்து * அடியார்களைக் கொண்டு போய் *
தன்மை பெறுத்தித் * தன் தாள் இணைக் கீழ்க் கொள்ளும் அப்பனை **
தொன்மை பிதற்ற வல்லாரைப் * பிதற்றுமவர் கண்டீர் *
நம்மை பெறுத்து எம்மை * நாள் உய்யக் கொள்கின்ற நம்பரே 7

நம்பனை ஞாலம் படைத்தவனைத் * திரு மார்பனை *
உம்பர் உலகினில் யார்க்கும் * உணர்வரியான் தன்னைக் **
கும்பி நரகர்கள் ஏத்துவர் ஏலும் * அவர் கண்டீர் *
எம் பல் பிறப்பிடை தோறு * எம் தொழு குலம் தாங்களே 8

குலம் தாங்கு சாதிகள் * நாலிலும் கீழ் இழிந்து * எத்தனை
நலம் தான் இலாத * சண்டாள சண்டாளர்கள் ஆகிலும் **
வலந்தாங்கு சக்கரத்து அண்ணல் * மணி வண்ணற்கு ஆள் என்று உள்
கலந்தார் * அடியார் தம் அடியார் * எம் அடிகளே 9

அடி ஆர்ந்த வையம் உண்டு * ஆலிலை அன்ன வசஞ்செய்யும் *
படி ஆதும் இல் குழவிப் படி * எந்தை பிரான் தனக்கு **
அடியார் அடியார் தம் அடியார் அடியார் தமக்கு *
அடியார் அடியார் தம் * அடியார் அடியோங்களே 10

** அடி ஓங்கு நூற்றுவர் வீய * அன்று ஐவருக்கு அருள் செய்த
நெடியோனை * தென்குருகூர்ச் சடகோபன் குற்றேவல்கள் **
அடி ஆர்ந்த ஆயிரத்துள் * இவை பத்து அவன் தொண்டர் மேல்
முடிவு * ஆரக் கற்கிற்கில் * சன்மம் செய்யாமை முடியுமே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---